# விராலிமலை தொகுதியில் கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் மூலம் குடிநீர் வழங்கிடல்!

## சட்டப்பேரவையில் கவனஈர்ப்புக்கு – அமைச்சர் கே.என்.நேரு விரிவான விளக்கம்!

**சென்னை, ஏப். 17-**

**சட்டப்பேரவையில், அ.தி.மு.க. உறுப்பினர் டாக்டர் சி.விஜயபாஸ்கர், விராலிமலைத் தொகுதியில் கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் மூலம் குடிநீர் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து பேரவையின் கவனத்தை ஈர்த்தார். அதற்கு பதிலளித்து நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு குறிப்பிட்டதாவது:-**

புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலை சட்டமன்றத் தொகுதி, விராலிமலை ஊராட்சி ஒன்றியம், அன்னவாசல் ஊராட்சி ஒன்றியம் மற்றும் குன்னாண்டார் கோயில் ஊராட்சி ஒன்றியம் ஆகியவற்றை உள்ளடக்கியது.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் பராமரிப்பில் உள்ள கீழ்க்கண்ட கூட்டுக் குடிநீர் திட்டங்களின்மூலம் விராலிமலை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதிகளுக்கு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது:

**புதுக்கோட்டை மாவட்டத்தைச் சார்ந்த 1,766 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம்**

காவிரி ஆற்றை நீராதாரமாகக் கொண்ட 1,766 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டத்தின்மூலம் விராலிமலை ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த 40 ஊராட்சிகளுக்கு நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 30 லிட்டர் வீதம் 1,21,000 மக்கள் பயன்பெறும் வகையில், 3.63 மில்லியன் லிட்டர் குடிநீரும், அன்னவாசல் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த 33 ஊராட்சிகளுக்கு நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 30 லிட்டர் வீதம் 1,02,000 மக்கள் பயன்பெறும்வகையில் 3.06 மில்லியன் லிட்டர் குடிநீரும், குன்னாண்டார் கோயில் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த 5 ஊராட்சிகளுக்கு நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 30 லிட்டர்வீதம் 13,000 மக்கள் பயன்பெறும் வகையில் 0.39 மில்லியன் லிட்டர் குடிநீரும் வழங்கப்பட்டு வருகிறது.

**புதுக்கோட்டை நகராட்சி, 3 பேரூராட்சிகள் மற்றும் 15 வழியோர கிராமங்களுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம்**

காவிரி ஆற்றை நீராதாரமாகக் கொண்டு புதுக்கோட்டை நகராட்சி 3 பேரூராட்சிகள் மற்றும் 15 வழியோர கிராமங்களுக்கான கூட்டுக் குடிநீர் திட்டத்தின் மூலம் அன்னவாசல் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த 3 ஊராட்சிகளுக்கு நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 40 லிட்டர் வீதம் 5,931 மக்கள் பயன்பெறும்வகையில் 0.055 மில்லியன் லிட்டர் குடிநீரும், விராலிமலை ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த 3 ஊராட்சிகளுக்கு நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 40 லிட்டர் வீதம் 19,190 மக்கள் பயன்பெறும்வகையில் 0.38 மில்லியன் லிட்டர் குடிநீரும் வழங்கப்பட்டு வருகிறது.

**1,751 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம்**

கொள்ளிடம் ஆற்றை நீராதாரமாகக் கொண்டு 1,751 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் விராலிமலை ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த 5 ஊராட்சிகளுக்கு நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 30 லிட்டர் வீதம் 13,613 மக்கள் பயன்பெறும்வகையில் 0.45 மில்லியன் லிட்டர் குடிநீரும், குன்னாண்டார்கோயில் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த 1 ஊராட்சிக்கு நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 30 லிட்டர் வீதம் 887 மக்கள் பயன்பெறும்வகையில் 0.03 மில்லியன் லிட்டர் குடிநீரும் வழங்கப்பட்டு வருகிறது.

**இராமநாதபுரம் கூட்டுக் குடிநீர் திட்டம்**

காவிரி ஆற்றை நீராதாரமாகக் கொண்டு இராமநாதபுரம் கூட்டுக் குடிநீர் திட்டத்தின் மூலம் விராலிமலை ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த 8 ஊராட்சிகளுக்கு நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 30 லிட்டர் வீதம் 18,402 மக்கள் பயன்பெறும்வகையில், 0.281 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

எனவே, மேற்கண்ட கூட்டுக் குடிநீர் திட்டங்கள் மற்றும் உள்ளூர்நீராதாரங்கள்மூலம் போதிய குடிநீர் வழங்கப்படுகிறது.

மேலும், விராலிமலை சட்டமன்றத் தொகுதியில் உள்ள விராலிமலை ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த 44 ஊராட்சிகள், அன்னவாசல் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த 34



ஊராட்சிகள் மற்றும் குன்னாண்டார்கோயில் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த 5 ஊராட்சிகளைச் சார்ந்த 4,01,704 மக்கள் பயன்பெறும் வகையில் நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 55 லிட்டர் வீதம் குடிநீர் வழங்கும் வகையில் புதுக்கோட்டை மாவட்டத்தைச் சார்ந்த புதுக்கோட்டை (பகுதி), விராலிமலை, அன்னவாசல், திருமயம், பொன்னமராவதி, குன்னாண்டார்கோயில், அரிமளம் (பகுதி), அறந்தாங்கி (பகுதி) ஊராட்சி ஒன்றியங்களில் 1,222 குடியிருப்புகளுக்கான காவிரி ஆற்றினை நீராதாரமாகக் கொண்ட கூட்டுக் குடிநீர் திட்டத்திற்கு ஆய்வு பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

**எனவே, தற்போது கூடுதல் காவிரி குடிநீர் வழங்க அவசியம் எழவில்லை.**

புதுக்கோட்டை கூட்டுக் குடிநீர்த் திட்டம் என்பது கடந்த காலத்தில், நான் உங்களைக் குறை சொல்ல வேண்டும் என்பதற்காகச் சொல்லவில்லை. நீங்கள் இருக்கிற வரை குடிநீர் குழாய்கள் மிகவும் பழுதுபட்டு, புதுக்கோட்டையில் 15 அல்லது 20 நாட்களுக்கு ஒரு முறை தண்ணீர் வழங்கப்பட்ட நிலை இருந்தது. நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு, மறுசீரமைப்பு செய்ய வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டு, உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு, ரூ.17 கோடி செலவில் மறுசீரமைப்பு செய்யப்பட்டது. அப்போதுதான் பல இடங்களில், வெளியிலிருந்து தண்ணீர் வழங்கப்பட்டதையெல்லாம் நிறுத்தி புதுக்கோட்டைக்கு வழங்கப்பட்டது.

புதுக்கோட்டைக்கு வழங்கப்பட்ட பிறகு மீண்டும் முதலமைச்சர் அவர்கள், மறுசீரமைப்புப் பணிகள், கிட்டத்தட்ட ரூ.67 கோடி செலவில், குடிநீர் குழாய்கள் எல்லாம் புதுப்பிக்கப்பட்டு, தற்போது 17 MLD தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. 17 MLD தண்ணீர்போதுமா என்றால், நிச்சயமாகப் போதாது. அது பற்றாக்குறையாகத்தான் இருக்கிறது. குறிப்பாக, வளர்ந்து வருகின்ற விராலிமலைப் பகுதியாக இருந்தாலும், புதுக்கோட்டைப் பகுதியாக இருந்தாலும், பல இடங்களில் சிரமமாக இருந்தது. எனவே, ஒரு புதிய கூட்டுக் குடிநீர்த்திட்டத்தை உருவாக்க வேண்டும் என்று, ஒட்டு மொத்த புதுக்கோட்டை மாவட்டத்திற்கும் ஒரு புதிய கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை உருவாக்கி, அதற்கு விரிவான திட்ட அறிக்கைத் தயார் செய்யப்பட்டது. ரூ.2,500/ கோடி செலவில் அந்தப் பணிகளும் துவங்கப்பட்டன. ஆனால், ஜல் ஜீவன் திட்டத்தின் நீட்டிப்பு இல்லாதக் காரணத்தினால், அந்த நேரத்தில் செய்ய முடியாமல் போய்விட்டது. இப்போது, மீண்டும் ஜல் ஜீவன் திட்டம் 2028 வரை இருக்கிற காரணத்தினால், புதுக்கோட்டையை இரண்டாகப் பிரிக்கிறார்கள்.

கந்தர்வக்கோட்டை, கீரனூர், அறந்தாங்கி, ஆவுடையார் கோவில் என்று ஒரு பகுதி. மற்றொன்று புதுக்கோட்டை கிழக்கு. ரூ.1,510/ கோடி செலவில் புதியக் கூட்டுக் குடிநீர்த் திட்டம் முதலமைச்சர் அவர்கள் அறிவித்து, தற்போது நடைமுறைப்படுத்தப்படவிருக்கிறது. அது எப்படியிருந்தாலும், tender கோரப்பட்ட பிறகு, பணிகளை ஆரம்பிக்க இருக்கிறார்கள். அடுத்து நாங்கள்தான் கேட்டோம்.

புதுக்கோட்டை ஏற்கெனவே முழுமையாக இருந்தது. இப்போது இரண்டு பகுதிகளாகப் பிரித்திருக்கிறீர்கள் என்று கேட்டபோது, நிதிநிலைமைக்கேற்ப மீண்டும் தனியார் பங்களிப்புடன் வேண்டுமனால் நீங்கள் நடத்துங்கள் என்று, தமிழ்நாட்டிலே முதன் முதலாக விராலிமலை அமைச்சர் ரகுபதி அவர்களுடைய பகுதி. அப்படியே நேரடியாக இராமநாதபுரம் செல்கிற பகுதி முழுவதற்கும் புதியத் திட்டம் ஒன்ற உருவாக்கப்பட்டிருக்கிறது.

நான் உங்களை சமாதானம் செய்வதற்காக இதை உங்களிடம் சொல்லவில்லை. ஏற்கனவே, இருக்கிற திட்டங்கள். இப்போது புதிதாக ஒரு திட்டம். இராமநாதபுரம் மாவட்டத்திற்கு ரூ.3,900/ கோடி செலவில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஒன்று புதிதாகத் தொடங்கப்பட்டிருக்கிறது. அது இன்னும் மூன்று மாத காலத்திற்குள்ளாக, புதுக்கோட்டை வழியாக இராமநாதபுரம் செல்லவிருக்கிறது. ஏற்கெனவே முதலமைச்சர் உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்தபோது கூட்டுக் குடிநீர்த் திட்டம் இராமநாதபுரத்திற்கு 90 MLD தண்ணீர், ரூ.700/ கோடி செலவில் செய்தார்கள்.

அதுவும் நம்முடைய புதுக்கோட்டை வழியாகத்தான் செல்கிறது. ஆனால், புதுக்கோட்டைக்கு அந்தத் தண்ணீர் தரவில்லை. இன்றைக்கு இருக்கின்ற நிலைமை, அந்த இரண்டு மாத காலத்திற்குள்ளாக, நம்முடைய கூட்டுக் குடிநீர்த்திட்டம், ஒட்டன்சத்திரம், வேடசந்தூர், திண்டுக்கல் பகுதியிலிருந்து இராமநாதபுரம் செல்கிற அந்தக் கூட்டுக் குடிநீர்த்திட்டம் தொடங்கவிருக்கிறது. அப்படி தொடங்கப்படுமானால், ஏற்கெனவே இருக்கிற திட்டம் நமது திருச்சியிலிருந்து இராமநாதபுரம் செல்கின்ற திட்டம் 90 MLD தண்ணீரை அங்கு அவ்வளவு தேவைப்படாது.

புதுக்கோட்டை மாவட்டத்திற்கு நமது பகுதியில், உங்களுடைய பகுதிக்கு திருப்புவதற்குரிய வாய்ப்பு இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். இதை நிச்சயமாக, அந்தத் திட்டம் கூடுதலாக வருகிற தண்ணீரை கொண்டுசெல்லவும், அதே போன்று இல்லாத பகுதிகளுக்குள்ள தண்ணீரைக் கொண்டுசெல்லவும், ஏற்பாடு செய்யப்படும். அதேநேரத்தில் நீங்கள் சீராக விநியோகம் செய்ய வேண்டுமென்று சொல்லியிருக்கிறீர்கள்.

உரியமுறையிலே அதிகாரிகளோடு கலந்துபேசி, எங்கும் கூட, குறைச்சல் இல்லாமல் ஒரே பகுதியில், ஒரு இடத்திலே ஒரு இடத்தில் 50 லிட்டர் கொடுக்கிறோம், ஒரு இடத்தில் 40 லிட்டர் கொடுக்கிறோம், ஒரு இடத்தில் 30 லிட்டர் கொடுக்கிறோம். கிராமம் என்றால் 30 லிட்டர் கொடுக்கிறோம். எனவே, ஒரே சீரான அளவில் அனைத்து மக்களுக்கும் செல்வதை, 17 MLD தான் தண்ணீர் இருக்கிறது. எனவே, அந்தத் தண்ணீரை பிரித்து அனைத்து மக்களுக்கும் தருகின்ற பணியை, நாட்களைக் குறைத்து, 7 நாட்கள், 8 நாட்கள் இருப்பதை குறைவாக கொடுத்து, இந்த மோட்டாரை அதிக நேரம் இயக்க முடியுமென்று சொன்னால், அதற்கான இந்த அதிகபட்சம் நுகர்வையும் கொண்டுவருவதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைக் கருத்திற்கொண்டு செயல்படுவோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

தருமபுரியில் அதுபோல் தான் வந்தது. ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த்திட்டத்திலே 130 MLD அளவு கொடுக்கப்பட்டபோது, அது 2030 ஆம் ஆண்டுதான் 130 MLD அளவு கொடுக்க வேண்டும். ஆனால், இப்போதே 130 MLD கொடுத்தும்கூட, பற்றாக்குறை வந்தபோது, உள்ளூரில் இருக்கின்ற அந்தத் தண்ணீரை ஒரு நாளுக்கு அதில் ஏற்றுவது, ஒரு நாளுக்கு இதில் ஏற்றுவது என்ற நிலையில்தான் அங்கே மாற்றிக் கொடுத்தோம். அதேபோல இங்கேயும் செய்ய முடியுமென்றால், அதை செய்து கொடுக்கலாம்.

இவ்வாறு அமைச்சர் கே.என்.நேரு விளக்கமளித்தார்.

---

### சமூக நீதிக்கு வழிகாட்டும் கலங்கரை விளக்கமாகத் தமிழ்நாடு திகழ்கிறது!

# மாநில சுயாட்சிக் கொள்கை செயல் வடிவம் பெற முதல்வர் அமைத்துள்ள குழு!

## ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ வரவேற்பு!

*சென்னை, ஏப்.17-*

*சமூக நீதிக்கு வழிகாட்டும் கலங்கரை விளக்கமாகத் தமிழ்நாடு திகழ்கிறது எனவும், மாநில சுய ஆட்சிக் கொள்கை செயல்வடிவம் பெற முதல்வர் அமைத்துள்ள குழு சிறப்பு மிக்கது எனவும் ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ தெரிவித்துள்ளார்.*

*1967 இல் ஆட்சிப் பொறுப்பேற்ற பேரறிஞர் அண்ணா அவர்கள் சட்டமன்றத்தில் திராவிட நாடு கோரிக்கையை கைவிட்டது பற்றி விளக்கம் அளித்த போது, "நான் திராவிட நாடு கோரிக்கையை கைவிட்டு விட்டேன். ஆனால் திராவிட நாடு கேட்பதற்கு என்னென்ன காரணங்கள் இருந்தனவோ அவற்றில் ஒன்றைக்கூட விட்டுவிடவில்லை" என்று கூறினார்.*

*அண்ணா அவர்கள் மறைவதற்கு ஆறு மாதங்களுக்கு முன்பு 21.07.1968 அன்று சிலம்பு செல்வர் ம.பொ.சி அவர்கள் நடத்திய மாநில சுயாட்சி கருத்தரங்கில் கலந்து கொண்டார். நிகழ்ச்சியில் முஸ்லிம் லீக் தலைவர் கண்ணியத்துக்குரிய காயிதே மில்லத் இஸ்மாயில் சாகிப், கம்யூனிஸ்ட் கட்சி தலைவர் கல்யாணசுந்தரம் போன்றோரும் பங்கேற்றனர்.*

*இதில் உரையாற்றிய பேரறிஞர் அண்ணா அவர்கள், "மத்திய அரசு பலமாக இருந்தது குப்த சாம்ராஜ்யத்தில்; மத்திய அரசு பலமாக இருந்தது பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில்; ஆனால் இன்று அந்த சாம்ராஜ்யங்கள் எங்கே? சரிந்த சாம்ராஜ்யங்களோடு இப்போது இருக்கின்ற சாம்ராஜ்யத்தை ஒப்பிடுவதற்கு உள்ளபடியே வருந்துகிறேன். அந்த சாம்ராஜ்யவாதிகள் அதிகமான வலிவு தேட முயற்சி செய்த ஒவ்வொரு நேரத்திலும் சரிவு தான்.*



*ஔரங்கசீப் காலத்தில் இருந்த வலுவான மத்திய ஆட்சிக்கு ஒப்பான ஆட்சியை சரித்திரத்தில் காண முடியாது. ஆனால் அந்த சாம்ராஜ்யம் என்ன ஆயிற்று என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும்.*

*மத்திய அரசின் வலிவு என்பது மாநிலங்களின் ஒவ்வொன்றின் தனித்தனி வலிமையையும் கூட்டியதால் ஏற்பட்ட மொத்த வலிவுதான் என்றால் வாதத்திற்கு ஏற்றது. அரசியலுக்கு நல்லது. காலத்துக்கு உகந்தது. ஆனால் மத்திய அரசு தான் எல்லா உரிமைகளையும், பலத்தையும் வைத்திருக்கும் மாநிலங்கள் தத்தித் தத்தி நடக்கும் அதிகாரங்கள் தான் வைத்திருக்கும் என்றால், அது எதற்கும் பொருத்தம் உடையது அல்ல.*

*மாநில அதிகாரங்களை எல்லாம் எடுத்து மத்திய அரசு குவித்துக் கொள்வதால் மாநிலங்கள் பலவீனம் அடையும் என்பது மட்டுமல்ல, மத்திய அரசுக்கு என்று புதிய வலிவு எதுவும் ஏற்பட்டு விடாது. மேல் அதிகாரம் அனைத்தும் டெல்லியில் இருப்பதை மாற்றிடத்தான் மாநில சுயாட்சித் தத்துவம் பிறந்திருக்கிறது.*

*மாநில சுயாட்சி என்பது தேவையின் அடிப்படையில் எழுந்த அரசியல் கோரிக்கைகளே தவிர அரசியல் கட்சிக் கோரிக்கை அல்ல" என்று மாநில சுயாட்சிக் கோட்பாடு பற்றி தெளிவுபட எடுத்துரைத்தார் அண்ணா.*

*'பேரறிஞர் அண்ணாவின் உயில்' என்று கருதப்படும் மாநில சுயாட்சித் தத்துவத்திற்கு செயல் வடிவம் கொடுப்பதற்கு அண்ணாவின் மறைவுக்கு பின்னர், முதல்வர் பொறுப்பை ஏற்ற அண்ணன் கலைஞர் அவர்கள் முனைந்தார்.*

*தலைமை நீதிபதியாக இருந்த டாக்டர் இராஜமன்னார் அவர்கள் தலைமையில் ஒய்வு பெற்ற நீதிபதி பி.சந்திரா ரெட்டி மற்றும் டாக்டர் ஏ.லட்சுமணசாமி முதலியார் ஆகியோரை உறுப்பினர்களாக கொண்டு மத்திய, மாநில உறவு குறித்து ஆராய்வதற்காக ஒரு குழுவை 22.09.1969 இல் அமைத்தார்.*

*இராஜமன்னார் குழு ஒராண்டு காலத்திற்கு மேல் ஆய்வுகளை மேற்கொண்டு 10.04.1971 அன்று தனது பரிந்துரை அறிக்கையை அளித்தது. அந்த அறிக்கையை ஒன்றிய அரசின் பார்வைக்கு முதல்வர் கலைஞர் அவர்கள் அனுப்பி வைத்தார்கள்.*

*பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் 22.06.1971 இல் முதல்வர் கலைஞருக்கு எழுதிய கடிதத்தில், "இராஜமன்னார் குழு பரிந்துரை குறித்து தமிழ்நாடு அரசின் கருத்தினை தெரியப்படுத்துங்கள்" என்று குறிப்பிட்டிருந்தார்.*

*அதன் பின்னர்தான் ஏப்ரல் 16, 1974 அன்று தமிழ்நாடு சட்டப்பேரவையில் வரலாற்று சிறப்புமிக்க மாநில சுயாட்சித் தீர்மானத்தை முதல்வர் கலைஞர் அவர்கள் முன்மொழிந்தார்கள். தீர்மானத்தின் மீது பல்வேறு கட்சி உறுப்பினர்கள் சட்டமன்றத்தில் தங்கள் கருத்துக்களை முன்வைத்தனர். ஏப்ரல் 20, 1974 இல் முதல்வர் கலைஞர் அவர்கள் பதிலுரை வழங்கும்போது,*

*மாநில சுய ஆட்சியின் தேவை குறித்து விளக்கம் அளித்து நீண்ட நேரம் உரையாற்றினார். அதன் பின்னர் மாநில சுயாட்சித் தீர்மானம் சட்டமன்றத்தில் நிறைவேறியது.*

*சட்டமன்றத்தில் முதல்வர் கலைஞர் அவர்களால் மாநில சுயாட்சித் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அரை நூற்றாண்டுகாலம் ஆகிறது. ஐம்பது ஆண்டு காலத்திற்குப் பிறகு மீண்டும் தமிழ்நாடு சட்டமன்றத்தில் திராவிட மாடல் அரசின் முதல்வர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள், "இந்திய அரசமைப்புச் சட்டத்தில் வழங்கப்பட்டுள்ள மாநிலங்களின் நியாயமான உரிமைகளைப் பாதுகாக்கவும், ஒன்றியமாநில அரசுகளுக்கு இடையேயான உறவுகளை மேம்படுத்திடவும், உச்சநீதிமன்ற மேனாள் நீதியரசர் குரியன் ஜோசப் அவர்களை தலைவராகக் கொண்ட குழு அமைக்கப்படுகிறது. இதன் உறுப்பினர்களாக, இந்திய கடல்சார் பல்கலைக் கழகத்தின் மேனாள் துணை வேந்தரும், ஒய்வுபெற்ற ஐ.ஏ.எஸ் அதிகாரியுமான அசோக் வர்தன் ஷெட்டி அவர்களும், தமிழ்நாடு மாநில திட்டக் குழுவின் மேனாள் துணைத்தலைவர் பேராசிரியர் மு.நாகநாதன் அவர்களும் இருப்பார்கள்" என்று அறிவித்திருக்கிறார்.*

*பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோரின் உயிர் மூச்சாக இருந்த மாநில சுயாட்சித் தத்துவத்திற்கு செயல் வடிவம் தருவதற்கு குழு அமைத்திருக்கிற முதல்வரின் அறிவிப்பு வரவேற்க தகுந்தது. வரலாற்றின் பக்கங்களில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியது ஆகும்.*

*இந்திய நாட்டிற்கு, சமூக நீதிக்கு வழிகாட்டும் கலங்கரை விளக்கமாக தமிழ்நாடு தான் திகழ்கிறது. மாநில சுயாட்சி முழக்கமும் தமிழ்நாட்டிலிருந்துதான் முதன் முதலில் எழுந்தது.*

*50 ஆண்டுகளுக்கு முன்பு தலைவர் கலைஞர் அவர்கள் மாநில சுயாட்சித் தீர்மானம் மீது சட்டமன்றத்தில் பேசுகையில் "நான் முன்மொழிந்த தீர்மானத்தை பலர் இங்கு வழி மொழிந்திருக்கிறார்கள். சிலர் என் மீதும், ஆளும் கட்சியின் மீதும் பழி மொழிந்திருக்கிறார்கள்" என்று தெரிவித்தார்.*

*மாநில சுயாட்சி பற்றி ஆராயக் குழு அமைக்கப்பட்ட உடன் இன்றைக்கும் பாஜக, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின் மீது பழி மொழிந்திருக்கிறது. அண்ணாவின் பெயரால் அமைந்திருக்கிற அதிமுக, பாஜகவை வழி மொழிந்திருக்கிறது.*

*இதையெல்லாம் அலட்சியப்படுத்திவிட்டு மாநில உரிமைகளுக்கு ஓங்கி முழங்கும் முதல்வர் மு.க.ஸ்டாலின் முயற்சிகள் வெற்றியடையும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.*

*இவ்வாறு ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ தெரிவித்துள்ளார்.*



திராவிட மாடல் முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் தலைமையை ஏற்று நாம் தமிழர் கட்சி முன்னாள் மாநில கலை இலக்கிய பண்பாட்டு பாசறை ஒருங்கிணைப்பாளர் இசைவேந்தன் ரமேஷ் அக்கட்சியிலிருந்து விலகி நெல்லை மாநகர கழக அலுவலகத்தில் மாநகர செயலாளர் சு.சுப்பிரமணியன் முன்னிலையில் கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டார். அவரிடம் கழக உறுப்பினர் படிவம் வழங்கப்பட்டது. உடன் வேங்கை வெங்கடேஷ், ஷெட்டி, பத்மா, பிந்து செய்யது, செல்வ ஆனந்த், வினோத்குமார், கார்த்திக் ஆகியோர் உள்ளனர்.

---

### ஒன்றிய, மாநில அரசுகளின் உறவை மேம்படுத்திட

# குழு அமைத்த முதல்வர் மு.க.ஸ்டாலினுக்குப் பாராட்டு!

## விவசாயிகள் - தொழிலாளர்கள் கட்சித் தலைவர் பொன்குமார் அறிக்கை!

*சென்னை, ஏப்.17-*

*இந்திய அரசமைப்பு சட்டத்தில் வழங்கப்பட்டுள்ள மாநிலங்களின் நியாயமான உரிமைகளைப் பாதுகாக்கவும்; ஒன்றிய, மாநில அரசுகளுக்கு இடையேயான உறவுகளை மேம்படுத்திடவும் ஒய்வு பெற்ற உச்சநீதிமன்ற நீதியரசர் குரியன்ஜோசப் அவர்களைத் தலைவராகக்*



*கொண்டு ஒரு குழுவை தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நியமித்திருப்பது காலத்தின் கட்டாயமாகும். இது மிகுந்த வரவேற்குரிய ஒன்றாகும். இதனை தமிழ்நாடு விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சி வரவேற்று, இந்தப் பணியை மேற்கொண்ட முதலமைச்சருக்கு வாழ்த்துக்களைத்தெரிவித்துக் கொள்கிறது.*

*இந்தியா என்பது பன்முகத் தன்மை கொண்ட ஒரு நாடாகும். பல்வேறு இனங்கள், மொழிகள், கலாச்சாரங்கள், பழக்க வழக்கங்கள் போன்ற மக்களைக் கொண்ட இந்தியாவிற்கான அரசியல் அமைப்பு சட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. அதில் ஒன்றிய, மாநில அரசுகளுக்கு இடையிலான உறவுகள் குறித்தும் தெளிவாக்கப்பட்டுள்ளது. ஆனால் ஒன்றியத்தில் ஆட்சிப் பொறுப்பில் வருகிறவர்கள் மாநில உரிமைகளை கொஞ்சம் கொஞ்சமாக நசுக்குகிற முயற்சியில் தொடர்ந்து ஈடுபட்டு வருவதை இந்த நாடறியும்.*

*குறிப்பாக மோடி தலைமையில் பாரதிய ஜனதா கட்சி அரசு ஒன்றியத்தில் அமைந்தப் பின்பு பாரதிய ஜனதா கட்சி அரசு அல்லாத எதிர்க்கட்சிகளின் அரசை ஒடுக்குவதற்கான முயற்சிகளில் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறது. அதன் வெளிப்பாடாக மாநில உரிமைகளைப் பறிக்கிற, நசுக்குகிற செயலில் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறது.*

*மாநில சட்டமன்றங்களில் நிறைவேற்றப்படுகிற தீர்மானங்கள் கூட ஒப்புதல் அளிக்கப்படாமல் சண்டித்தனம் செய்யப்படுவதையும், அதனை உச்சநீதிமன்றம் மூலம் தமிழ்நாடு முதலமைச்சர் மீட்டதை இந்த நாடறியும். மாநிலப் பட்டியலில் இருந்த கல்வியை ஒன்றிய, மாநில இடையிலான ஒத்திசைவு பட்டியலுக்கு மாற்றப்பட்டுள்ளது. மொழி, பண்பாடு, கலாச்சார பிரச்சனையாக இருந்தாலும், நிதி ஒதுக்கீடு பிரச்சனையாக இருந்தாலும் அதில் தொடர்ந்து ஒன்றிய அரசு மாநிலங்களுக்கு ஓரவஞ்சனை செய்து வருகிறது. ஜிஎஸ்டி என்கிற பெயரில் மொத்த மாநிலத்தின் வருவாயையும் சுரண்டி கொள்ளும் ஒன்றிய அரசு, மாநிலங்களுக்கு தன் விருப்பத்திற்கு ஏற்ப ஒதுக்கீடு செய்கிறது. தமிழ்நாட்டிற்கு ஒரு ரூபாய்க்கு 29 பைசா மட்டுமே நிதி பகிர்வு செய்யப்படுவது அநீதியின் உச்சமாகும். மாநிலங்கள் சுயமாக செயல்பட்டால் தான் நாடு முன்னேறும். ஆனால் இந்தியாவிலேயே வளர்ந்து வரும் தமிழ்நாடு அரசுக்கு தொடர்ந்து ஒன்றிய மோடி அரசு முட்டுக்கட்டை போட்டு வருகிறது.*

*எனவே இந்த நிலையில் ஒன்றிய, மாநில அரசுகளுக்கு இடையேயான உறவை மேம்படுத்திட வேண்டியது காலத்தின் கட்டாயமாகும். அந்த நோக்கத்திற்காக தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று சட்டப்பேரவையில் 110 விதியின் கீழ் ஒரு அரிய அறிவிப்பை வெளியிட்டுள்ளார். இந்திய அரசமைப்பு சட்டத்தில் வழங்கப்பட்டுள்ள மாநிலங்களின் நியாயமான உரிமைகளை பாதுகாக்கவும்; ஒன்றிய, மாநில அரசுகளுக்கு இடையேயான உறவுகளை மேம்படுத்திடவும் ஒரு குழுவை அமைத்து நாட்டிற்கு அறிவித்துள்ளார். இந்த குழுவிற்கு உச்சநீதிமன்ற மேனனால் நீதியரசர் குரியன்ஜோசப் அவர்கள் தலைவராகவும், ஓய்வு பெற்ற ஐ.ஏ.எஸ் அலுவலர் கே.அசோக்வர்தன்ஷெட்டி அவர்களும், மேனாள் தமிழ்நாடு திட்டக்குழுவின் துணைத் தலைவரான பேராசிரியர் மு.நாகநாதன் அவர்களும் உறுப்பினர்களாக அறிவிக்கப்பட்டுள்ளனர்.*

*மாநில உரிமைகளை மீட்பதிலும், மாநிலங்கள் மீது ஒன்றிய அரசு மேற்கொள்ளும் முரட்டுத்தனமானத் தாக்குதலைத் தடுத்து நிறுத்துவதிலும் இந்தியாவிற்கு வழிகாட்டியாக திகழும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஒன்றிய மாநில அரசுகளின் உறவுகளை மீட்டெடுத்து மேம்படுத்துவதிலும் சாதனைப்படைப்பார் என விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சி பாராட்டுகிறது.*

*இவ்வாறு பொன்குமார் தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.*



கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர், நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ் வேப்பமூடு, சர் சி.பி.இராமசாமி ஐயர் நினைவு பூங்கா வளாகத்தினுள் ரூபாய் 3 கோடியே 49 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு வரும் அறிவியல் பூங்கா கட்டுமான பணிகளை மாநகராட்சி அதிகாரிகளுடன் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். ஆய்வில் நாகர்கோவில் மாநகராட்சி ஆணையர் நிஷாந்த் கிருஷ்ணா, மாநகர நல அலுவலர் மருத்துவர் ஆல்பர் மதியரசு, மாநகராட்சி பொறியாளர் ரகுராமன், சுகாதார அலுவலர்கள் முருகன், ராஜாராம், பகுதி செயலாளர்கள் என்.பி.துரை, மு.சேக்மீரான், மாநகராட்சி அதிகாரிகள் உட்பட கழக நிர்வாகிகள் பலர் உடனிருந்தனர்.